විශ්‍රාම වැටුප් දෙපාර්තමේන්තුව
ஓய்வூதியத் திணைக்களம்
DEPARTMENT OF PENSIONS
ශ්‍රී ලංකා විශ්‍රාම
இலங்கை ஓய்வு
Sri Lanka Pensions
පරපුරක අභිමානය  தலைமுறையொன்றின் பெருமிதம்  Pride of a Generation

මගේ අංකය
எனது இல.
My No. } ஓய்/அறிவுறுத்தற் கடித இலக்கம் 01/2016

ඔබේ අංකය
உமது இல.
Your No. }

දිනය
திகதி
Date } 12-01-2016

அனைத்து மாவட்டச் செயலாளர்கள் மற்றும்
பிரதேச செயலாளர்களிற்கு,

**6/2006 பொது நிர்வாகச் சுற்றுநிருபத்தின் படி ஓய்வூதியங்களைச் சீராக்குதல்.**

பொது நிர்வாகச் சுற்றுநிருப இலக்கம் 16/2015 இன் படி ஓய்வூதியங்களைச் சீராக்கும் நடவடிக்கைகள் 2015 ஆகஸ்ட் மாதமளவில் ஆரம்பிக்கப்பட்டுத் தற்சமயமாகுகையில் 95% அளவிலான சம்பளச் சீராக்க நடவடிக்கைகள் முற்றுப் பெற்றுள்ளன. இவ் ஓய்வூதியச் சீராக்க நடவடிக்கைகள் திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட விசேட கணணி நிகழ்ச்சிகள் மூலம் வலைப்படுத்தப்பட்ட தொகுதியொன்றினுள் மேற்கொள்ளப்பட்டன. குறித்த நடவடிக்கைகளை ஆற்றுகையில் தாங்கள் மற்றும் தங்களது அலுவலர் குழாமினால் வழங்கப்பட்ட ஒத்துழைப்பினைப் பெறுமதி மிக்கதாய்க் கருதுகின்றேன்.

02. இவ் ஓய்வூதியச் சீராக்கங்களை மேற்கொள்ளுகையில் அதற்காகப் பின்பற்றப்பட வேண்டிய செயல்முறைகள் தொடர்பில் எனது சுற்றுநிருப இலக்கம் 5/2015 மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

03. இச் செயற்பாட்டினைத் துரிதமாக முடிவுறுத்தும் பொருட்டு திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட விசேட கணணி நிகழ்ச்சியினுள் தரவுகளை உள்ளடக்குதல் குறித்த விடயத்திற்குப் பொறுப்பான ஓய்வூதிய உத்தியோகத்தர் அல்லது அபிவிருத்தி உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. அத் தரவுகளைப் பரிந்துரைத்தல் (Recommended) பிரதேச செயலகங்களின் கணக்காளர்களினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென என்னால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. அதன் அடிப்படையில் பிரதேச செயலகங்களின் கணக்காளர்களினால் இச்சம்பள மாற்றங்களுக்கான பரிந்துரைகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதுடன், தொடர்ந்தும் பரிந்துரைக்கப்படாத சம்பள மாற்றங்கள் உள்ளமை அவதானிக்கப்பட்டுகின்றது.

04. இச்சம்பளமாற்றங்களின் நம்பகுதன்மையினை உறுதிப்படுத்தியதன் பின்னர் அவற்றினைப் பரிந்துரைப்பது பிரதேச செயலகங்களின் கணக்காளரது பொறுப்பாதலால், தாமதமின்றிக் குறித்த பரிந்துரைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தல்களை வழங்கும் படி தயவுடன் வேண்டுகின்றேன்.

(ஒப்பம்)
எஸ்.எஸ். ஹெட்டிஆரச்சி,
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்.

பிரதிகள்
1. செயலாளர் - பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு
2. செயலாளர் - நிதி அமைச்சு
3. செயலாளர் - உள்நாட்டலுவல்கள் அமைச்சு
4. கணக்காய்வாளர் நாயகம் - தகுந்த நடவடிக்கைகளுக்காக

මාලිගාවත්ත, කොළඹ 10, மாளிகாவத்தை கொழும்பு 10, Maligawatta, Colombo 10.
Hot line : 1970, Direct line : 2209800, Fax : 2342078, Email : info@pensions.gov.lk, web : www.pensions.gov.lk

විශ්‍රාම වැටුප් දෙපාර්තමේන්තුව

ஓய்வூதியத் திணைக்களம்

DEPARTMENT OF PENSIONS

ශ්‍රී ලංකා විශ්‍රාම
இலங்கை ஓய்வு
Sri Lanka Pensions

පරපුරක අභිමානය | தலைமுறையொன்றின் பெருமிதம் | Pride of a Generation

මගේ අංකය
எனது இல.
My No. ஓய்/அறிவுறுத்தற் கடித இலக்கம் 01/2016

ඔබේ අංකය
உமது இல.
Your No. .........................

දිනය
திகதி
Date 12-01-2016

அனைத்து மாவட்டச் செயலாளர்கள் மற்றும்
பிரதேச செயலாளர்களிற்கு,

**மையப்படுத்தப்பட்ட தரவுத் தொகுதியின் நடவடிக்கைகளை இற்றைப்படுத்துதல்.**

மாதாந்த ஓய்வூதிய வழங்கல் நடவடிக்கைகளை வினைத்திறன்மிக்க முறையில் நிறைவேற்றும் பொருட்டு தற்சமயமாகுகையில் மையப்படுத்தப்பட்ட தரவுத் தொகுதியின் மூலம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதன்படி தொடர்ந்தும் கொடுப்பனவு நடவடிக்கைகளைச் சிக்கல்களின்றி மேற்கொள்ளும் பொருட்டு கீழ் குறிப்பிடப்படும் வண்ணம் கருமமாற்றுதல் வேண்டும்.

**2. அறவீடுகள் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.**

அறவீடுகள் தொடர்பில் பிரதேச செயலகங்கள் கருமமாற்ற வேண்டிய விதம் தொடர்பில் எனது இலக்கம் PN/CA/2015/1 மற்றும் 10-09-2015 ஆந் திகதி கொண்ட கடிதத்தில் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் படி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். மேலதிக ஓய்வூதியக் கொடுப்பனவுகளை மீள அறவிடுதல் (Surcharge), விதவைகள் அனாதைகள் அறவீடுகள் (W&OP) மற்றும் அறவிடப்படாத பணிக்கொடைகளை ஓய்வூதியத்திலிருந்து அறவிட்டுக் கொள்ளுதல் என்பனவற்றினை 2015 நவம்பர் மாதம் முதல் திணைக்களத்தினால் நேரடியாகவே அறவிட்டுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதனால், மேற்குறித்த விடயங்கள் தொடர்பிலான புதிய அறவீடுகளைத் தங்களால் தரவுத் தொகுதியினுள் உள்ளடக்குதல் கூடாது. அவை தொடர்பில் கீழ்வரும் வண்ணம் கருமமாற்றுதல் கட்டாயமானதாகும்.

அ. பிரதேச செயலங்களினால் தற்சமயமாகுகையில் மேற்குறித்த அறவீடுகளின் பொருட்டுத் தரவுத் தொகுதியினுள் உள்ளடக்கியுள்ள தகவல்களை அவ்வாறே பராமரித்துச் செல்லுதல்.

ஆ. ஏதேனுமோர் ஓய்வூதியரிடமிருந்து அரசிடத்தே அறவிடப்பட வேண்டிய அறவீடுகள் தொடர்பில் தங்களிடத்தே அறிவிக்கப்பட்டதுமே அறவீடுகளை மேற்கொள்ளும் பொருட்டுத் துரிதமாக அத்தகவல்களை திணைக்களத்திடம் அனுப்புதல்.

இ. பிரதேச செயலகங்கள் மூலம் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களின் படியான மாதாந்த அறவீடுகள் மற்றும் திணைக்களத்தினால் நேரடியாக உள்ளடக்கப்படுகின்ற தகவல்கள் தொடர்பிலான மாதாந்த அறவீடுகளையும் மையப்படுத்தப்பட்ட தரவுத் தொகுதியின் மூலம் வெவ்வேறாக இனங்காணும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதனால், அதன் அடிப்படையில் அறவீடுகளின் நம்பகதன்மையினை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

ஈ. இது வரையிலுமான அறவீடுகள் தொடர்பில் மாதாந்தக் கணக்குப் பொழிப்புகள் மூலம் கணக்கீடுகளை மேற்கொள்வதனைப் (திணைக்கள நேரடி அறவீடுகள் மற்றும் பிரதேச செயலக அறவீடுகள்) பிரதேச செயலகங்களினால் நிறைவேற்றுதல் கூடாது.

මාලිගාවත්ත, කොළඹ 10, மாளிகாவத்தை கொழும்பு 10, Maligawatta, Colombo 10.
Hot line : 1970, Direct line : 2209800, Fax : 2342078, Email : info@pensions.gov.lk, web : www.pensions.gov.lk

உ. ஏனைய அறவீடுகள் தொடர்பில் இலக்கம் PN/CA/2015/1 மற்றும் 10-09-2015 ஆந் திகதி கொண்ட கடிதத்தில் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களின் படி கருமமாற்றுதல் வேண்டும்.

**3. கட்டுப்பாட்டுக் கணக்குகளைப் பராமரித்துச் செல்லுதல்.**

திணைக்களத்தினால் மாவட்ட ரீதியில் மற்றும் பிரதேச செயலக ரீதியில் கட்டுப்பாட்டுக் கணக்குகளை மாதாந்தம் தயாரித்து அவற்றினை மையப்படுத்தப்பட்ட தரவுத் தொகுதியில் காண்பிக்கப்பட்டுள்ளது. அதன் படி பிரதேச செயலகங்களினாலும் கட்டுப்பாட்டுக் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டியதுடன், திணைக்களக் கட்டுப்பாட்டுக் கணக்குடன் மாதாந்தம் ஒப்பிட்டு நம்பகுதன்மையினை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

**4. மாவட்டச் செயலகங்களுக்கான கட்டுநிதிகளை விடுவித்தல்.**

மாதாந்தம் மாவட்டச் செயலகங்களிடத்தே விடுவிக்கப்பட வேண்டிய கட்டுநிதியின் அளவினை, அவ் அவ் பிரதேச செயலகங்களிடத்தே விடுவிக்கப்பட வேண்டிய கட்டுநிதியின் அடிப்படையில் தரவுத் தொகுதியினுள் உள்ளடக்குவதற்கான நடவடிக்கைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும். அதன்படி திறைசேரியினால் கட்டுநிதி விடுவிக்கப்படும்.

**(ஒப்பம்)**
**எஸ்.எஸ். ஹெட்டிஆரச்சி,**
**ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்.**

| | | |
|---|---|---|
| பிரதிகள் | 1. செயலாளர் | - பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு |
| | 2. செயலாளர் | - நிதி அமைச்சு |